# வெள்ளத்தனைய மலர்நீட்டம்

*முனைவர் மு. துர்கா தேவி*
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி, திருநெல்வேலி
https://doi.org/10.5281/zenodo.15526545

**முன்னுரை**

*ஊக்கமுடைமை செயல்களை நிறைவேற்றுவதற்குத் துணை நிற்கும். அவற்றைச் செய்து முடிப்பேன் என்று கருதுவதால் பெறப்படும் உந்து ஆற்றல் அது. ஊக்கமுடையோர் குறிக்கோள்களில் ஒரு சிறுபகுதியும் தவறாதிருந்து, செயல்களை ஆற்றுவதில் பெரிதும் கண்ணும் கருத்துமாய் இருப்பர்.*

*அறிவைஓர் கருவியாக அறிந்திருக்கிறோம். ஆனால், அறிவைக் கருவியாகப் பயன்படுத்த, செயல்களை இயக்க உதவும் உந்து சக்திதான் ஊக்கம். மனித உயிருக்கு இயல்பிலேயே அறிவறியும் ஆற்றலும் கிளர்ந்து எழுகின்ற இயல்பும் உண்டு. உயிரின் இந்தக் கிளர்ந்தெழும் ஆற்றல் நல்வழிப்படுத்தப் பெறும்பொழுது சிறந்த பயன் கிடைக்கிறது. உள்ளம் கிளர்த்தெழுந்து செயல் செய்யும் உணர்வுக்கு ஊக்கமுடைமை என்பது பெயர். வள்ளுவர் ஊக்கத்திற்கு அசைவிலா ஊக்கம் என்று அடைமொழி கொடுத்துப் பேசுகின்றார். இது இடுக்கண்கள் பல ஏற்பட்டாலும் சே ார்வடையாமல் முன்னோக்கிச் செல்வதைக் குறிக்கும். இத்தகைய ஊக்கமுடைமையின் ஒரு பகுதியாக வள்ளுவர் குறிப்பிடும் வெள்ளத்தனைய மலர்நீட்டம் என்ற தலைப்பினை ஆராய்வதாய் இக்கட்டுரை அமைகின்றது.*

**ஊக்கமுடைமை**

*ஊக்கமுடைமை என்பது ஒருவரின் வாழ்வில் வெற்றி பெற மிகவும் இன்றியமையாத ஒரு குணமாம். ஒருவருக்கு ஊக்கம் இல்லையென்றால், அவர் எந்தப் பணியையும் செய்ய முடியாது. ஊக்கம் என்பது ஒருவரின் மனதில் ஒரு வேலையைச் செய்ய வேண்டும் என்ற ஆவலைத் தூண்டுகிறது. ஊக்கமுடைமை என்பது ஒருவரின் வாழ்வில் முன்னேறவும், உயரவும் உதவும் ஒரு சக்தி வாய்ந்த கருவியாகும்.*

*ஊக்கமுடைமை என்பது செயலாற்றுவதில் தளர்ச்சியின்றி மன எழுச்சி உடைதலைக் குறிக்கும். செயலின்கண் ஆர்வமும் நிறைவேற்றிவிட வேண்டும் என்பதன் முயற்சியையும் உள்ளடக்கியது. ஒருவன் வாழ்வில் உயர்வடைவதற்கு ஊக்கம் இன்றியமையாததாக வேண்டப்படுகிறது. ஊக்கமில்லையெனில், போட்டி நிறைந்த இவ்வுலகில் வெற்றி பெற்று முன்னிலையில் நிற்க இயலாது. இவ்வதிகாரத்தைத் தொடர்ந்து வரும் மடியின்மை, ஆள்வினை உடைமை, இடுக்கணழியாமை என்பனவும் ஊக்கமுடைமைக்கு நெருங்கிய தொடர்புடையனவே எனலாம்.*

*ஊக்கமுடைமையின் பயன்கள்*

**தன்னம்பிக்கை**

*ஊக்கமுடைமை ஒருவருக்குத் தன்னம்பிக்கையை அளிக்கிறது.*

**விடாமுயற்சி**

*ஊக்கமுள்ளவர்கள் எந்தப் பணியையும் விடாமல் தொடர்ந்து முயல்வர்.*

**உழைப்பு**

*ஊக்கமுடைமை ஒருவருக்கு உழைக்கும் திறனை அளிக்கிறது.*

**வெற்றி**

*ஊக்கமுள்ளவர்கள் தங்கள் வாழ்வில் வெற்றி பெறுகின்றனர்.*

**தன்னம்பிக்கையை வளர்க்கவும்**

*ஒருவருக்குத் தன்னம்பிக்கை இருந்தால், அவர் ஊக்கத்துடன் செயல்பட முடியும்.*

**நல்ல இலக்குகளை நிர்ணயித்துக் கொள்ளவும்**

*ஒருவருக்கு ஒரு இலக்கு இருந்தால், அதை அடைவதற்கு ஊக்கத்துடன் உழைப்பார்.*

**தொடர்ந்து முயலவும்**

*ஒரு வேலையைச் செய்ய முடியாது என்று நினைக்காமல், தொடர்ந்து முயல வேண்டும்.*

**சுற்றுப்புறச் சூழ்நிலையைச் சாதகமாக்கிக் கொள்ளவும்**

*ஒருவருக்குச் சாதகமான சூழ்நிலை இருந்தால், அவர் ஊக்கத்துடன் செயல்பட முடியும்.*

**ஊக்கமுடைமையின் முக்கியத்துவம்**

*ஊக்கமுடைமை ஒருவரின் வாழ்வில் ஒரு மிக முக்கியமான கருவியாகும். ஊக்கமுடைமை இல்லையென்றால், ஒருவரின் வாழ்வில் முன்னேற முடியாது. ஊக்கமுடைமை ஒருவருக்குத் தன்னம்பிக்கையையும், விடாமுயற்சியையும், உழைப்பையும் அளிக்கிறது. ஊக்கமுடைமை ஒருவரின் வாழ்வில் வெற்றி பெற உதவுகிறது.*

**உள்ளத்தைப் பொறுத்து உயர்வு**

*நீர்ப்புக்களினது தண்டின் நீளமானது நீரின் ஆழத்தின் அளவினது ஆகும்சு அதுபோலவே, மக்களின் உயர்வும் அவர்களுடைய ஊக்கத்தின் அளவினதே ஆகும் என்று வள்ளுவப் பெருந்தகை கூறுகின்றார். இதனையே,*

***"வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு."***

***(குறள் எண்.595)***

*என்ற குறட்பாவின் மூலம் எடுத்தியம்புகின்றார். தண்ணீரின் அளவுதான் அதில் மலர்ந்துள்ள தாமரைத் தண்டின் அளவும் இருக்கும். அதுபோல, மனிதரின் வாழ்க்கையின் உயர்வு அவர் மனத்தில் கொண்டுள்ள ஊக்கத்தின் அளவே இருக்கும்.*

*ஊக்கமுடையவன் செல்வத்தைத் தேடித்திரிய வேண்டியதில்லை. ஏனெனில், செல்வமானது ஊக்கமுடைய மக்களின் இருப்பிடத்தைத் தானே தேடிப் போய்ச் சேரும் தன்மை வாய்ந்தது.*

*குளத்தில் உள்ள நீர் உயர உயர, அதில் உள்ள கொடிப் புக்களும் உயர்ந்து காணப்படுவதுபோல, மக்களின் ஊக்கம் உயர உயர, அவர்களது வாழ்வும் உயர்ந்து காணப்பெறும்.*

**தன்னம்பிக்கை**

*சங்க இலக்கியத்தில் சில வீரர்களிடத்தும், சில புலவர்களிடத்தும் தன்னம்பிக்கை வேறு வடிவத்தில் காணப்பட்டது. தன் வீரத்தின் மீதுள்ள நம்பிக்கையே தன்னம்பிக்கை. எத்தகைய படைவரினும், தனி ஒருவன் தாங்கி நிற்கின்ற வீரம் காணப்பட்டது.*

**"வருவிசைப் புனலைக் கற்சிறை போல
தனிஒருவன் தாங்கிய பெருமை தானும்"**

***(தொல். புறம். 65)***

*என்பதிலே அவனுடைய வீரநம்பிக்கை வெளிப்படுகிறது. யானையை அடக்குதலும், புலிப்பல் வேட்டையும் வீரநம்பிக்கையே. புலவர்களிடத்தில் "வித்யாகர்வம்" எனப்படுகிற தன் புலமையின் மீதுள்ள நம்பிக்கையே தன்னம்பிக்கை.*

**"எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே"**

**(புறம்.206)**

என்ற ஔவை பாடல் என்பதிலே புலமை நம்பிக்கை காணப்படுகிறது.

**"யான் ஓர் வாணிகப் பரிசிலேன் அல்லன்"**

**(புறம்.206)**

என்பதும் புலமை நம்பிக்கையே. மற்றபடி, எல்லாமே ஊழ்தான்.திருவள்ளுவர்தான் முதன்முதலில்,

**"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றி**
**தாழாது உஞற்று பவர்"**

**(குறள்.620)**

என்ற தன்னம்பிக்கையோடு முதலடி எடுத்து வைத்தார்.

**"தெய்வத்தால் ஆகா தெனினும் முயற்சிதன்**
**மெய்வருத்தக் கூலி தரும்"**

**(குறள்.619)**

முயற்சி திருவினையாக்கும் அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும் என்று ஊக்கமுடைமை, வினைத்திட்பம், ஆள்வினை உடைமை போன்ற அதிகாரங்களில் விளக்குகிறார். இப்படி ஊக்கத்தையும், நம்பிக்கையையும் ஏற்படுத்த வேண்டிய சூழலில் திருவள்ளுவர் இருந்தார்.

சங்கம் மருவிய காலம் நாட்டில் குழப்பங்களும், அமைதியின்மையும் நிறைந்திருந்த காலகட்டம் என்றும், தமிழ் சிறப்பொழிந்து இருந்ததாகவும், பாலி மொழி வழக்கிலிருந்ததாகவும், அது தமிழர்களின் இருண்ட காலம் என்றும் திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டு வருகிறது. சோர்ந்திருந்த மக்களுக்கு நம்பிக்கையுட்ட முயற்சி, செயல் வலிமை, விதியை மதியால் வெல்லலாம் என்று சொல்லப்பட்டது. இந்தச் சுழலை, இந்த வாழ்வை மாற்ற இயலும் என்ற நம்பிக்கையை முதன்முதலில் திருக்குறள் விதைத்தது. எல்லா நீதி இலக்கியங்களும் "செயல் வலிமை" பற்றிப் பேசின. வழிகாட்டும் குருவின் "சொல் வலிமை" பற்றிப் பேசின. ஔவையார் ஆத்திசுடியில்

**"ஊக்கமது கைவிடேல்"**

என்றார். சிற்றிலக்கியக் காலத்திலும் தன்னம்பிக்கை தேவைப்படவில்லை. எப்போதும் யாரையாவது அண்டிப் பிழைக்கிற சமூகத்தில் குறுநில மன்னர்களும், ஜமீன்தார்களும் நிறைந்திருக்க, தன்னம்பிக்கை பெரிதாகத் தேவைப்படவில்லை. அண்டிப் பிழைப்பதைத் தூக்கித் தூர எறிந்துவிட்டு, தன்னம்பிக்கையோடு புறப்பட்ட 20-ஆம் நூற்றாண்டின் முதல் மனிதர் பாரதியார்.

பாரதியாரிடத்திலிருந்தே தன்னம்பிக்கைச் சிந்தனை தொடங்குகிறது பரவுகிறது. சங்கப் புலவர்களின் அதே ஆளுமையைப் பாரதியாரிடத்தில் காண முடியும்.

**"அக்கினிக் குஞ்சொன்று கண்டேன் - அதை**
**அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்**
**வெந்து தணிந்தது காடு - தழல்**
**வீரத்திற் குஞ்சென்று மூப்பென்று முண்டோ?**
**தத்தரிகிட தத்தரிகிட தித்தோம்"**

எண்ணத்தில் தோன்றும் எரிதழலின் சிறு பொறியை, மனத்தில் உறைந்திருக்கும் சிறுமை எனும் மரப்பொந்தில் இட்டேன். அந்தச் சிறு பொறியின் சக்தியால் மனத்தின் சிறுமைகள் மடிந்தது மட்டுமல்லாமல், அச்சம், மடமை, துன்பம்,பொய் முதலிய தீமைகள் அனைத்தையும் கொண்ட மனமென்னும் காடே ஒட்டுமொத்தமாக எரிந்தது. சிறுமைகள் சிதைந்தழிந்த நெஞ்சம் நற்குணங்கள் பொலிந்து தெளிவுற்றது. இந்த விந்தை நிகழ்வு உணர்த்தும் உண்மை யாதெனில், வாழ்வில் அல்லவை தேய்ந்து அறம் பெருக வைக்க, பலனளிக்காத ஆயிரம் செயல்கள் செய்வதைக் காட்டிலும், செம்மைப்பட்ட சக்தி வாய்ந்த ஒரே ஒரு எண்ணம் மட்டும் போதும் தீமைகள் எல்லாம் மாய்ந்து துயர் தீரும். எழுச்சிமிக்க எண்ணத்தின் சக்தியில் சிறியது பெரியது என்ற பாகுபாடில்லைசு ஒரே ஒரு எண்ணத்தையோ, சொல்லையோ, செயலையோ கொண்டு பெரியதொரு மாற்றத்தைத் தோற்றுவிக்கும் ஆற்றல் மனிதனுக்கு உண்டு.

என்று உறங்கிக் கிடந்த அத்தனைபேரின் மனக்காடுகளிலும் தன்னம்பிக்கைத் தீ மூட்டியவர். சோர்ந்து கிடந்தவர்களைத் தட்டியெழுப்பி, உற்சாகப்படுத்தி, வருந்தி

*அழுந்துபவர்களுக்கு ஆறுதல் சொல்லி, நடக்கிறவர்களுக்கு ஓடும் ஆற்றலைத் தந்து நிற்பவை பாரதியாரின் பாடல்கள்.*

***"தேடிச் சோறுநிதந் தின்று- பல***
***சின்னஞ் சிறுகதைகள் பேசி - மனம்***
***வாடித் துன்பமிக உழன்று - பிறர்***
***வாடப் பலசெயல்கள் செய்து - நரை***
***கூடிக் கிழப்பருவ மெய்தி - கொடுங்***
***கூற்றுக் கிரையெனப்பின் மாயும் - பல***
***வேடிக்கை மனிதரைப் போலே - நான்***
***வீழ்வே னென்றுநினைத் தாயோ?"***

*என்ற வைர வரிகளே தமிழகத்தின் அத்தனை சாதனையாளர்களையும், கலைஞர்களையும் உருவாக்கின.*

***"நல்லதோர் வீணை செய்தே,***
***அதை நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?"***

*என்று மயிலிறகாய் ஆறுதல் சொல்லி தன்னம்பிக்கையை மனதினில் விதைத்தவர்.*

***"மனதில் உறுதி வேண்டும்"***

*என்று பாடியவர். பாரதியாரின் "புதிய ஆத்திசுடி"யும் தன்னம்பிக்கையை வளர்த்தது. பாரதியாரின் காலகட்டத்தில் தன்னம்பிக்கையை மக்கள் மனதில் ஊன்றிய மற்றொருவர் விவேகானந்தர். இருவரும் வாழ்ந்த சமகால அரசியல் நெருக்கடிச் சுழல் தன்னம்பிக்கை குறித்து அவர்களைப் பேச வைத்தது. ஆயினும், அவர்களின்மறைவுக்குப்பல ஆண்டுகளுக்குப் பிறகே, அவர்தம் கருத்துக்கள் மக்களிடத்தில் பரவலாக்கப்பட்டன் மேற்கோள்களாக்கப்பட்டன.*

*அறிஞர்களுடைய தன்வரலாற்று நூல்கள் தன்னம்பிக்கையைத் தந்தன. எல்லாத் தன்வரலாற்று நூல்களும் தன்னம்பிக்கை நூல்களே! அதனில், உ.வே.சா.வின் "என் சரித்திரம்" குறிப்பிடத்தக்க ஒன்று. நாடு முழுவதும், நடந்து சென்று, தேடித் தேடிப் பதிப்பித்த அவரது வாழ்விலிருந்து, சற்றும் அயராத உழைப்பிலிருந்து தன்னம்பிக்கையைப் பெற முடியும். அடுத்தது, நாமக்கல் கவிஞரின் "என் கதை" சுயசரிதை. காதுகள் மந்தமாகிப் போன நிலையிலும், உயர்நிலை, அடைந்த அவரின் கதையிலிருந்து தன்னம்பிக்கையைப் பெற முடியும்.*

*தன் வரலாற்று நூல்களிலேயே அதிகம் வாசிக்கப்பெற்ற, இந்தியா முழுவதும் தாக்கத்தை ஏற்படுத்திய நூல்கள் இரண்டு. ஒன்று, மகாத்மா காந்தியின் "சத்திய சோதனை". அது இந்தியா முழுவதும் தன்னம்பிக்கையையும், உள்ளொளியையும் பாய்ச்சியது. இரண்டாவது, அப்துல்கலாம் அவர்களின் "அக்னிச் சிறகுகள்". தொடர் தோல்விகளால் தொடர்ந்த வாழ்க்கை, அக்னி ஏவுகணையாகப் பறந்தது. காந்தியின் தன்னம்பிக்கை மனதில் வேரூன்றி, உள்ளொளியாக மலர்ந்ததெனில், அப்துல்கலாமின் தன்னம்பிக்கை விண்ணில் சீறிப் பாய்ந்தது.*

*தன்னம்பிக்கையைத் தூண்டும்படியாக, பலர் சுயமுன்னேற்ற நூல்களைப் படைத்தனர். எம்.எஸ். உதயமூர்த்தி, மெர்வின், சுவாமி சுகபோதானந்தா, வெ. இறையன்பு, சிந்தனைக் கவிஞர் கவிதாசன், மரபின் மைந்தன் முத்தையா (நமது நம்பிக்கை) முதலியோர் பலர்தன்னம்பிக்கைநூல்களைப்படைத்தனர்சு படைக்கின்றனர். இவர்களுக்கெல்லாம் முன்னோடியாக அப்துற் றஹீம் அவர்கள் தன்னம்பிக்கை நூல்களை எழுதினார். "தமிழில் வெளிவந்த முதன் தன்னம்பிக்கை நூல்சு என்னும் அடைமொழியோடு 1948இல் அப்துற் றஹீம் அவர்களின் "வாழ்க்கையில் வெற்றி" நூல் வெளியானது.*

*சுதந்திரத்திற்குப் பிறகான வாழ்க்கையைப் பற்றிய மக்களின் எதிர்பார்ப்புகள் அனைத்தும் பொய்யாகிப் போன வேளையில், தன்னம்பிக்கையை மட்டுமே முன்வைத்து அதிகமான நூல்கள் வெளிவரத் தொடங்கின. "கூட்டு வாழ்க்கை சிதையத் தொடங்கிய நிலையில், இனி மற்றவர்களை நம்பிப் பயனில்லை" எனும்பொழுதில், உன்னையே நீ அறிவாய்சு என்பது முன்வைக்கப்பட்டது.*

*மனிதனுக்கு மேலானவையாக இருந்த தெய்வம், அரசன், குரு, நாடு என அனைத்தும் கடத்தப்பட்டு, புகழ் சேர்ப்பதும், பணம் சேர்ப்பதும் முதன்மையான இடத்தைப் பெற்றன. அத்தனை தன்னம்பிக்கை நூல்களும்*

*இவ்விரண்டையே முன்மொழிந்தன. "நீயும் சாதனையாளனாகலாம், நீயும் பணக்காரன் ஆகலாம்சு என்று பேராசை காட்டின.*

*நீங்களும் வெல்லலாம், வாழ்க்கையில் வெற்றிக்கு ஏணிப்படிகள், தடைகளைத் தாண்டுங்கள், சிகரத்தை நோக்கி, உன்னால் முடியும், நீங்களும் சாதிக்கலாம் என்ற தலைப்புகளில் நூற்றுக்கணக்கான நூல்கள் வெளிவந்தன. இன்றும் வெளிவருகின்றன. "நீங்களும்" என்பதில் உள்ள "உம்" உளவியல் ரீதியாக மக்களைத் தொட்டது. இந்த "உம்" இழிவு சிறப்பும்மையா?*

*தன்னம்பிக்கை என்பது இன்று ஒரு "உற்பத்திப் பண்டம்". உணவைப் போல, மருந்தைப் போல, என்றைக்கும், எல்லாருக்கும் தேவையான பொருள் "தன்னம்பிக்கை". உற்பத்தியாளர்கள் தங்கள் தாய்மொழியில், வாய்மொழியில், கைமொழியில் உற்பத்திப் பண்டத்தைத் தயார் செய்கின்றனர். தன்னம்பிக்கை என்பது வியாபாரக் காந்தமா? ஒருவனுடைய ஆசையைத் தூண்டி, அதனைத் தன்னம்பிக்கையாக உருமாற்றி, அவனை ஏமாற்றும் தொழிலைக் கொண்டிருக்கின்றன. 12 ஆண்டுகள் கல்வி பயின்று வெளியேறும் ஒரு மாணவனிடத்தில் தன்னம்பிக்கையை விதைக்க இயலாமல் போகிற கல்வி முறையையும், ஆசிரியர்களையும் கொண்டிருக்கிற நிலைதான் இன்று உள்ளது. கல்லூரியில் பட்டம் பெற்று வெளியேறுகிற ஒருவன் அல்லது ஒருத்தி அற்ப விஷயங்களுக்காகத் தற்கொலை செய்து கொள்வதை இன்று காண முடிகிறது. மதிப்பெண் குறைவோ, குடும்பத்தில் பிரச்சனையோ, பருவக்காதலோ, வகுப்பறை அவமானமோ. எதுவாகினும் அவற்றைப் புறந்தள்ளிவிட்டு, வீறுநடை போட வேண்டாமா? இந்நாள் மாணவரும், முன்னாள் மாணவரும்! சமூகத்தில் ஒருவர் தற்கொலை செய்துகொள்கிறபோது, 1 ஆம் வகுப்பு முதல் கல்லூரிப் படிப்பு வரை அவருக்குப் பாடம் எடுத்த அத்தனை ஆசிரியர்களும் குற்றவாளிகளே! தன்னம்பிக்கை என்பது புகழ் சேர்ப்பது, பணம் பெருக்குவது, அறிவியல் கண்டுபிடிப்பு, கலைச் சாதனை ஆகியவற்றைவிட "உயிர்காத்தல்" இன்றியமையாதது. பாரதியை, விவேகானந்தரை, அறிஞர் பெருமக்களின் வாழ்க்கை வரலாற்றை, தமிழை, இலக்கித்தைப் படிக்க வைப்போம்! உயிர் காப்போம்!*

**உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்**

*தீமை தம்மை நெருங்கி வந்தாலும், அழிவு தம்மை அடைய வந்தாலும், துன்பம் தம்மைத் தாக்கவந்தாலும், ஊக்கமுள்ள மக்கள் ஒருபோதும் தளர்ச்சியடைவதில்லை. உடல் முழுவதும் அம்புகளால் தாக்கப்பட்ட போதிலும் கூட, யானையானது பெருமித நடைபோடுவதில் தவறுவதில்லை.*

*மக்கள் என்போர் ஊக்கமுடையவர் அஃதில்லாதவர் "மக்கள்" ஆகார், மக்களுக்கும் மரப்பொம்மைகளுக்கும் எவ்வளவு வேறுபாடு உண்டோ, அவ்வளவு வேறுபாடு ஊக்கம் உள்ளவர்க்கும் அற்றவர்க்கும் உண்டு.*

*ஊக்கமுள்ள மக்கள் நல்லதை, உயர்வை, பெரியதை எண்ணி, அவைகளை அடைய முயற்சிப்பர். ஒருக்கால் தோல்வி அடையினும், அவற்றைப் பெற மீண்டும் மீண்டும் முயற்சிப்பர்.*

*பகைவன் அதிக வலிமையுடையவனாயினும், மிகப் பெரியவனாயினும், ஊக்கமுள்ளவனைக் கண்டால் அஞ்சியே தீர்வான் அதிக வலிமையும் பெருமித நடையும் உள்ள யானையும், ஊக்கமுள்ள புலியின் தாக்குதலால் நிலை குலைந்துவிடும்.*

***"மற்றவர்களைவிட நாம் உயர்ந்தவர்கள்"** என்று பெருமை கொள்ளும் சிறப்பு ஊக்கமில்லாதவர்க்கு இல்லை. இவை வள்ளுவரது கருத்துக்கள்,*

*உள்ளத்தில் ஊக்கமில்லாதவர்க்குச் சுற்றுப்புறச் சூழ்நிலை நன்கு அமைந்திருந்தாலும், வாய்ப்பும் வசதியும் மிகுந்திருந்தாலும் பயனில்லை. வாழ்வில் ஒளி தோன்ற வேண்டுமானால், உள்ளத்தில் ஊக்கம் தோன்றியாக வேண்டும்.*

ஆகவே, எண்ணுங்கள். நன்றாக எண்ணுங்கள். நல்லதை எண்ணுங்கள். பெரியதை எண்ணுங்கள். ஊக்கத்தோடு எண்ணுங்கள். ஏனெனில்,

“**எண்ணிய எண்ணியாங்கு எய்து எண்ணியார்**
**திண்ணியர் ஆகப் பெறின்.**”

**(குறள் எண். 666)**

ஒன்றைச் செய்ய எண்ணியவர் அதைச் செய்து முடிப்பதற்கு ஏற்ற மனஉறுதியை உடையவராக இருந்தால், அடைய நினைத்தவற்றை எல்லாம் அவர் எண்ணப்படியே அடைவார். என்று வள்ளுவப் பெருந்தகை குறிப்பிடுகின்றார்.

**ஊக்கமுடைமை சிறப்புகள்**

ஊக்கமுடைமை என்பது ஒரு மனிதனின் மிகப்பெரிய சொத்து. அது இல்லையெனில், மற்ற சொத்துக்கள் அனைத்தும் நிலைக்காது. ஊக்கமுள்ளவன் எத்தகைய தடைகளையும் மீறி முன்னேற முடியும்,மேலும், துன்பத்திலும் மனதை உறுதியாக வைத்திருக்கிறான்.

**நிலைத்த செல்வம்**

ஊக்கம் இல்லாதவனிடம் இருந்து பொருள் செல்வம் நிலைக்காது. நிலைபெற்ற செல்வம் ஊக்கமுடையவன்.

**உயர்நிலை**

மனதின் ஊக்கத்தின் அளவே ஒரு மனிதனின் வாழ்க்கையின் உயர்வு.

**முயற்சிக்கு வழி**

எது செய்தாலும் உயர்ந்த எண்ணத்துடன் செய்ய வேண்டும்.

**உறுதி**

துன்பத்திலும் ஒல்காது, உறுதியாக செயல்படுவான்.

**எதையும் சாதிக்கும் திறன்**

எதையும் சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்கும்.

**வெற்றி**

மனதின் ஊக்கம் தான் வெற்றிக்கு வழி.

**ஊக்கமே உயர்வு**

உடைமைகள் என்று சொல்லப்படுகிற எல்லாப் பொருள்களையும் அடைதற்கு ஊக்கமே காரணமாகும். ஆதலால், அதனையுடையவரை உடையர் என்றும், அது இல்லார் உடையராகார் என்றும் ஊக்கமுடைமையின் உயர்வை உணர்தல் வேண்டும் என்கின்றன அதிகாரத்துப் பாடல்கள்.

ஊக்கமுடைமை சிறந்த செல்வம் தம்மிடமுள்ள பொருளை இழந்தாலும் ஊக்கத்தால் அதை மீண்டும் பெற்றுவிடுவோம் என்ற நம்பிக்கை இருப்பதால் ஊக்கமுடையோர் இழப்புக்கு வருந்தமாட்டார்கள்சு ஒருவனது ஆக்கம் அவனது ஊக்கத்தின் அளவாகும்சு அவ்வாக்கங்களும் அவன் இருப்பிடம் தேடிச் செல்லும் எப்பொழுதுமே ஊக்கம் கொண்டவனாகவே இருக்கவேண்டும். சிலபல செயல்களில் வெற்றி கிடைக்காவிட்டாலும் அவை தோல்வியாகக் கருதப்படார். ஊக்கம் இருந்தால்தான் பொருள் ஈட்டி வள்ளன்மைக்குப் பயன்படுத்தமுடியும். ஊக்கத்தில் முன்னேறிச் செல்பவர்க்கு பெரிய இடையுறுகள் வந்தாலும் அவர்கள் சிந்தை தளரமாட்டார்கள். யானையினும் சிறிய உருவான புலி யானையை விட ஊக்கம் மிகுதியாக இருப்பதால் அது யானையை அஞ்சச் செய்கிறது. ஊக்கத்தின் மேல் ஊக்கம் பெற்று வாழ்வில் வெற்றி பெற வேண்டும் ஊக்கமே ஒருவற்கு அறிவாவது. அது இல்லாதவர்கள் உருவத்தால் மட்டுமே மக்கள். மற்றபடி அவர்கள் மரத்துக்கு ஒப்பானவர்களே. இவை இவ்வதிகாரம் தரும் செய்திகளாகும்.

**முடிவுரை**

இன்றைய சமுக சிந்தனைகளும், 2000-ஆம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்த சமுக சிந்தனைகளும் மாறுபட்டு இருந்தாலும், வள்ளுவர் எழுதிய திருக்குறள் எக்காலத்திற்கும் பொருந்தும் சமுதாய நிலையைப் பிரதிபலிக்கிறன. எனவேதான், வீரமாமுனிவர் 1730-இல் திருக்குறளை இலத்தீன் மொழியில் மொழிபெயர்த்தார், 1886இல் ஜி.யு போப்

*ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார், ஜெர்மனி மொழியில் கிரவுல் என்பவர் மொழிபெயர்த்தார். மேலும், 125 மேற்பட்ட மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இவ்வாறு திருக்குறள் புதிய சமுதாய சிந்தனைகளைத் தூண்டும் விதமாக அமைந்துள்ளது. திருக்குறள் ஒரு சமுதாய வழிகாட்டியாய், நண்பராய், இன்றியமையாத வாழ்வில் விளக்காய் ஒளிர்கிறது. இத்தகைய திருக்குறளில் ஊக்கமுடைமை குறித்து வள்ளுவர் கூறிய வெள்ளத்தனைய மலர் நீட்டம் என்பதனை ஆராய்வதாய் இக்கட்டுரை அமைகின்றது.*